இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
மட்டம் - 5
இறுதிப் பரீட்சை – 2022
**STU5525/STU 5511**– கல்வி உளவியல்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 25.11.2022 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

இவ் வினாத்தாள் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.

பகுதி - I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

1. கல்வி உளவியல் என்ற கருத்தினை சுருக்கமாக விளக்குக.
2. விஞ்ஞான அல்லது கணித பாட ஆசிரியராக உங்களுக்கு கல்வி உளவியல் அறிவானது கற்றலை மதிப்பிடுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை விவரிக்குக.
3. குழந்தை ஆராய்ச்சி முறைகளுடன் தொடர்புபட்ட வகையில் சோதனைசார் முறைகள் (Experimental Methods) அத்துடன் சோதனைசாரா முறைகள் (Non-Experimental Methods) ஆகியவற்றை மூன்று (03) உதாரணங்கள் குறிப்பிட்டு சுருக்கமாக விவரிக்குக.
4. "பூரண விருத்தி" (Total Development) என்பதனால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விவரிக்குக.
5. கற்றலில் தயார்நிலை (Readiness) எனும் பதம் அத்துடன் அதன் முக்கியத்துவத்தை இரு (02) உதாரணங்கள் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
6. மூன்று (03) பிராதான கற்றல் கொள்கைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினதும் இரு (02) பிரதான அடிப்படைக் கொள்கைகளை குறிப்பிடுக.
7. கண்டறிதல் கற்றலில் (Discovery Learning) ஆசிரியரின் வகிபங்கினை இரண்டு (02) உதாரணங்கள் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
8. பண்டூராவின் அவதானக் கற்றல் கொள்கையின் நான்கு (04) படிகளை சுருக்கமாக விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. இளமைப் பருவத்தின் போது (Adolescence) அபிவிருத்தியோடு இணைந்த பிரதான நான்கு (4) பண்புகளை ஆராய்க

(04 புள்ளிகள்)

ii. இளமைப்பருவ மாணவர்களினால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் மூன்றினை (03) சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

iii. ஒரு ஆசிரியராக மேற்கூறப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதனை பொருத்தமான உதாரணங்களினூடாக ஆலோசனை செய்க.

(10 புள்ளிகள்)

10.

i. வளர்ச்சி (Growth) மற்றும் விருத்தி (Development) ஆகியவற்றிற்கான வேறுபாட்டை இரண்டு (02) உதாரணங்களினூடாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. ஓர் குழந்தையின் வளர்ச்சி மற்றும் விருத்தியைப் பாதிக்கும் காரணிகள் மூன்றினை (03) சுருக்கமாக விவரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. ஒரு ஆசிரியராக பிள்ளையின் பூரண விருத்தியில் எவ்வாறு பங்களிப்பு செய்யமுடியும் என்பதனை நான்கு (04) உதாரணங்கள் குறிப்பிட்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

11.

i. பியாஜேயின் அறிவுசார் விருத்தி கோட்பாட்டிற்கமைய ஓர் தனிநபரின் அறிவுசார் விருத்தியின் முக்கிய கட்டங்களை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. மேற்கூறப்பிட்ட கட்டங்களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து அக்கட்டத்துடன் இணைந்த நடத்தைசார் பண்புகளை சுருக்கமாக விவரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. மாணவர்களுக்கான கற்றல் அனுபவங்களை ஒழுங்குபடுத்துகையில் அறிகைசார் விருத்தி படிநிலைகளைக் கவனத்தில்கொண்டு அதன் முக்கியத்துவத்தை ஆராய்க.

(10 புள்ளிகள்)

12.

i. குறுகிய கால ஞாபகம் (Short term memory) மற்றும் நீண்ட கால ஞாபகம் (Long-term memory) ஆகியவற்றை மூன்று (03) உதாரணங்கள் மூலமாக வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

ii. ஓர் விஞ்ஞான அல்லது கணித பாட ஆசிரியராக மாணவர்களின் ஞாபகப்படுத்தலை மேம்படுத்த நடைமுறைப்படுத்த வேண்டிய மூன்று (03) உத்திகளை ஆராய்க.

(08 புள்ளிகள்)

iii. ஓர் ஆசிரியரினால் கற்றல் இடமாற்றத்தை (Transfer of Learning) எவ்வாறு எளிதாக்க முடியும் என்பதனை நான்கு (04) உதாரணங்கள் குறிப்பிட்டு விவரிக்குக.

(08 புள்ளிகள்)

13.

i. கற்றலோடு இணைந்த வகையில் ஊக்கல் (Motivation) என்ற பதத்தினை வரையறுக்குக.

(04 புள்ளிகள்)

ii. ஊக்கலோடு இணைந்த மனித விடயம்சார் கோட்பாடு ஒன்றினைக் குறிப்பிட்டு அதனைக் கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறையில் எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதனை சுருக்கமாக விவரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. ஒருவரின் கற்றலின் உள்ளார்ந்த ஊக்கம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஓர் விஞ்ஞான அல்லது கணித பாட ஆசிரியராக கற்றல் செயன்முறையில் உள்ளார்ந்த ரீதியல் ஊக்கப்படுத்தப்பட்டவர்களாக மாணவர்களை விருத்திசெய்வதில் உமது வகிபங்கினை விளக்குக.

(08 புள்ளிகள்)

14.

i. குழந்தை ஆராய்ச்சி முறைமையில் சோதனைசாரா முறைகள் (Non- Experimental Methods) நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்ட சோதனைசாரா முறைமைகளில் ஒன்றினை தெரிவுசெய்து அதன் பண்புகள், பலம் மற்றும் பலவீனங்களை ஆராய்க.

(06 புள்ளிகள்)

iii. ஓர் ஆசிரியர் எவ்வாறு குழந்தை ஆராய்ச்சி முறைமைகள்சார் அறிவை கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பிரயோகிக்க முடியும் என்பதனை மூன்று (03) உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

**20 x 03 = 60** புள்ளிகள்

மொத்த புள்ளிகள் =100

*பதிப்புரிமை பெற்றது*